என்பதாகும். இயேசுவைப்போன்ற இயல்பைக் கொண்டவராகிய பரிசுத்த ஆவியானவரின் மூலமாக இயேசுவின் இயல்பு நம்மில் வாசம் பண்ணுவதை நாம் அறிவோம். ''இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்'' என்று பவுல் எழுதியிருக்கிறார் [கலா. 2:20].

அவருடைய திறமையும் இயல்பும் நமக்குள் இருக்கிறபடியால், நம்மால் கிறிஸ்துவைப்போல வாழ முடியும். நமக்கு இன்னுமதிகமாக அன்பும், பொறுமையும், இச்சையடக்கமும் தேவைப்படவில்லை. ஏனென்றால் அதிகமாக நேசிக்கும், அதிகப் பொறுமையும் இச்சையடக்கமும் உள்ள நபர் நமக்குள் வாசம்பண்ணுகிறார்! நாம் செய்ய வேண்டியதெல்லாம் நம் மூலமாக அவர் வாழும்படி அனுமதிப்பதுதான்.

என்றாலும் நமக்கு ஒரு பெரிய சத்துரு இருக்கிறான். அவன் இயேசுவின் இயல்பை எதிர்த்துப் போரிடுகிறான். அது நம்மூலமாக வெளிப்படுத்தப்படுவதைத் தடுக்கிறான். நாம் நமது *மாம்சத்தைச்* சிலுவையில் அறைய வேண்டும் என்று பவுல் சொல்லியதில் வியப்போதுமில்லை. நமது மாம்சத்தைக் குறித்து எதையேனும் செய்ய வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது. இதைக் குறித்துத் தேவன் எதையாவது செய்யும்படி வேண்டிக்கொண்டு வெறுமனே இருக்கக் கூடாது. பவுலும் தனது மாம்சீகமான இயல்புகளைக் குறித்த பிரச்சினைகளை எதிர்நோக்கினார். ஆனால் அவர் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, அதை மேற்கொண்டார்:

> மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன் [1 கொரி. 9:27].

நீங்கள் ஆண்டவருக்கு முன்பாகப் பரிசுத்தமாக நடக்க விரும்புவீர்களானால், நீங்களும் உங்கள் சரீரத்தை உங்கள் ஆவியின் அடிமையாக ஆக்க வேண்டும். உங்களால் அதைச் செய்ய முடியும்!





# 11

# பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம்

ஒருவர் நடபடிகளின் புத்தகத்தை வாசிக்கும்போது, அதன் ஒவ்வொரு பக்கத்திலும் பரிசுத்த ஆவியானவரின் கிரியைக்கான நிரூபணத்தைக் காண முடியும். நடபடிகளின் புத்தகத்திலிருந்து நீங்கள் பரிசுத்த ஆவியானவரின் கிரியைகளை அகற்றுவீர்களானால், அதில் எதுவுமே எஞ்சியிருக்காது. மெய்யாகவே, ''உலகத்தைக் கலக்கும்படி'' அவர் முதல் சீஷர்களுக்கு வல்லமையளித்தார் [பார்க்க, அப். 17:6].

இன்று உலகத்தில் சபை துரிதமாகப் பரவிக்கொண்டிருக்கும் பகுதிகள் இயேசுவைப் பின்பற்றுகிறவர்கள் பரிசுத்த ஆவியானவருக்கு ஒப்புக்கொடுத்து, அவருடைய வல்லமையினால் செயல்பட்ட பகுதிகளாகும். இது நமக்கு வியப்பளிக்கக் கூடாது. நாம் நமது சொந்த முயற்சிகளைக் கொண்டு பத்தாயிரம் ஆண்டுகளில் சாதிக்கக்கூடியதை விடப் பரிசுத்த ஆவியானவரால் பத்தே வினாடிகளில் அதிகமாகச் சாதிக்க முடியும். எனவே சீஷரை உருவாக்கும் ஊழியர் விசுவாசிகளின் வாழ்க்கையிலும் ஊழியங்களிலும் பரிசுத்த ஆவியானவரின் கிரியையைக் குறித்து வேதவசனங்கள் போதிப்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

நடபடிகளின் புத்தகத்தில், விசுவாசிகள் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெற்று, ஊழியத்துக்காக வல்லமை பெறுவதைக் குறித்து நாம் அடிக்கடி பார்க்கிறோம். அவர்கள் அனுபவித்ததை நாமும் அனுபவிக்கும்படியாகவும், அவர்கள் பெற்றபடி பரிசுத்த ஆவியானவரின் அற்புதமான உதவியைப் பெறும்படியாகவும், இதைக் குறித்து ஞானத்தோடு கற்றுக்கொள்ள வேண்டும். ஆதி அப்போஸ்தலர்களின் காலத்தோடு பரிசுத்த ஆவியானவரின் அற்புதமான கிரியைகள் முடிவுக்கு வந்துவிட்டன என்று சிலர் கூறினாலும், அப்படிப்பட்ட

கருத்துக்கு வேதாகம ஆதாரமோ, வரலாற்று ஆதாரமோ அல்லது தர்க்க ரீதியான ஆதாரமோ இல்லை என்றே நான் காண்கிறேன். அது அவநம்பிக்கையிலிருந்து எழுந்த ஒரு கொள்கையாகும். தேவனுடைய வார்த்தை கூறுவதை விசுவாசிப்பவர்கள் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட ஆசீர்வாதங்களைப் பெறுவார்கள். இஸ்ரவேலர் அவிசுவாசத்தின் காரணமாக வாக்குப்பண்ணப்பட்ட தேசத்துக்குள் நுழைய முடியாமல் போனதுபோல, இன்று தேவனுடைய வாக்குத்தத்தங்களை விசுவாசிக்காதவர்கள் தேவன் அவர்களுக்காக ஆயத்தம்பண்ணியிருப்பவைகளில் நுழைய மாட்டார்கள். நீங்கள் எந்தப் பிரிவில் இருக்கிறீர்கள்? தனிப்பட்ட முறையில், நான் விசுவாசிகளின் நடுவே இருக்கிறேன்.

## பரிசுத்த ஆவியானவரின் இரண்டு கிரியைகள்

ஆண்டவராகிய இயேசுவை மெய்யாகவே விசுவாசித்துள்ள ஒவ்வொரு நபரும் தன் வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவரின் கிரியையை அனுபவித்திருக்கிறார். அவருடைய உள்ளான மனுஷன் அல்லது ஆவி பரிசுத்த ஆவியானவரால் மறுபடியும் பிறக்கும்படி செய்யப்பட்டிருக்கிறது [பார்க்க, தீத்து 3:5]. பரிசுத்த ஆவியானவர் இப்போது அவருக்குள் வாசம்பண்ணுகிறார் [பார்க்க, ரோமர் 8:9; 1 கொரி. 6:19]. அவர் ''ஆவியினால் பிறந்திருக்கிறார்'' [யோவான் 3:5].

இதைப் புரிந்துகொள்ளாமல் பல கரிஸ்மாடிக் மற்றும் பெந்தெகொஸ்தே சபையினர் தவறு செய்திருக்கிறார்கள். அவர்கள் ஒரு விசுவாசியிடம் அவர் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெற்று, அந்நிய பாஷையில் பேசாதபடியால், அவர் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றிருக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். இது பிழை என்பது வேத வசனங்களிலிருந்தும் அனுபவத்திலிருந்தும் தெரிகிறது. கரிஸ்மாடிக் மற்றும் பெந்தெகொஸ்தே விசுவாசிகளைவிட மற்ற விசுவாசிகளில் பலர் பரிசுத்த ஆவியானவர் தங்களுக்குள் வாசம் பண்ணுவது குறித்த அதிகமான நிரூபணங்களைக் காட்டுகிறார்கள்! பவுல் கலாத்தியர் 5:22–23 வசனங்களில் பட்டியலிட்டுள்ள ஆவியின் கனியை அவர்கள் அதிகமான அளவு வெளிப்படுத்துகிறார்கள். பரிசுத்த ஆவியானவர் உள்ளே வாசம்பண்ணாவிட்டால் இது இயலாத காரியமாகும்!

ஆனால் ஒருவர் ஆவியினாலே *பிறந்திருக்கிறார்* என்பதினால் அவர் பரிசுத்த ஆவியின் *ஞானஸ்நானத்தைப்* பெற்றிருக்கிறார் என்று சொல்ல முடியாது. வேதாகமத்தைப் பொருத்தவரையில் ஆவியினால் பிறப்பதும், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெறுவதும் இரண்டு வெவ்வேறான அனுபவங்களாகும்.

முதலில் இயேசு பரிசுத்த ஆவியானவரைக்குறித்துச் சமாரியப் பெண்ணிடம் சொல்லியதைப் பார்ப்போம்.





> நீ தேவனுடைய ஈவையும், தாகத்துக்குத் தா என்று உன்னிடத்தில் கேட்கிறவர் இன்னார் என்பதையும் அறிந்திருந்தாயானால், நீயே அவரிடத்தில் கேட்டிருப்பாய், அவர் உனக்கு ஜீவத்தண்ணீரைக் கொடுத்திருப்பார் என்றார்... இந்தத் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கு மறுபடியும் தாகமுண்டாகும். நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது; நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும் என்றார் [யோவான் 4:10, 13–14].

இயேசுவானவர் குறிப்பிட்ட உள்ளே ஊறும் ஜீவத்தண்ணீர் விசுவாசிக்குள் வாசம்பண்ணும் பரிசுத்த ஆவியானவரையே குறிக்கிறது என்ற முடிவுக்கு வருவது சரியாகும். இயேசுவானவர் பின்னரும் ''ஜீவத் தண்ணீர்'' என்ற சொல்லைப் பயன்படுத்துவதை நாம் யோவான் சுவிசேஷத்தில் பார்க்கிறோம். அவர் பரிசுத்த ஆவியானவரைக் குறித்தே பேசுகிறார் என்பதில் ஐயமில்லை.

> பண்டிகையின் கடைசி நாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று, சத்தமிட்டு: ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன். வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார். தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற *ஆவியைக் குறித்து இப்படிச் சொன்னார்*. இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை [யோவான் 7:37–39 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

இந்த முறை இயேசுவானவர் ஜீவத்தண்ணீர் ''நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும் '' என்று சொல்லவில்லை. இந்தமுறை ஜீவத்தண்ணீர் அதைப் பெறுகிறவர்களின் உள்ளத்திலிருந்து ஓடும் நதியைப் போலிருக்கிறது என்று அவர் சொல்லியிருக்கிறார்.

யோவான் சுவிசேஷத்தில் உள்ள இந்த இரண்டு பகுதிகளும் ஆவியினாலே பிறப்பதற்கும், ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெறுவதற்கும் இடையேயுள்ள வேறுபாட்டை அழகாக எடுத்துச் சொல்லியிருக்கின்றன. ஆவியினாலே பிறப்பது என்பது மறுபடியும் பிறந்தவர் நித்திய ஜீவனை அனுபவிக்க வேண்டும் என்று அவருக்காகக் கொடுக்கப்படுகிறது. ஒருவர் ஆவியினாலே பிறக்கும்போது அவர்

தனக்குள் ஆவியின் நீரூற்றைப் பெற்றிருக்கிறார், இது அவருக்கு நித்தியஜீவனைக் கொடுக்கிறது.

ஆனால், ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவது அடிப்படையில் பிறருடைய பயனுக்காகவேயாகும். ஏனென்றால், இது பரிசுத்த ஆவியானவரின் வல்லமையின் மூலமாக விசுவாசியை மற்றவர்களுக்கு ஊழியம் செய்யும்படி ஆயத்தப்படுத்துகிறது. இவர்களின் ''உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்.'' இவை பரிசுத்த ஆவியானவரின் வல்லமையின் மூலமாக மற்றவர்களுக்குத் தேவனுடைய ஆசீர்வாதங்களைக் கொண்டுவரும்.

### பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் ஏன் தேவைப்படுகிறது

மற்றவர்களுக்கு ஊழியம் செய்வதற்கு நமக்குப் பரிசுத்த ஆவியானவர் மிகவும் அத்தியாவசியமாகத் தேவைப்படுகிறார். அவருடைய உதவியில்லாமல் நம்மால் ஒருபோதும் சகல ஜாதிகளையும் சீஷராக்க முடியாது. எனவேதான், உலகம் சுவிசேஷத்தைக் கேட்க வேண்டும் என்பதற்காகத்தான் தம்மை விசுவாசிப்பவர்களுக்குப் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைக் கொடுப்பதாக இயேசுவானவர் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். அவர் தமது சீஷர்களிடம் இவ்வாறு கூறினார்:

> என் பிதா வாக்குத்தத்தம்பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். *நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும்* எருசலேம் நகரத்தில் இருங்கள் [லூக்கா 24:49 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

இயேசுவானவர் இப்படிச் சொல்லுவதாக லூக்கா மேலும் குறிப்பிட்டிருக்கிறார்:

> பிதாவானவர் தம்முடைய ஆதினத்திலே வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல. *பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து*, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் [அப். 1:7–8 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

இயேசுவானவர் தமது சீஷர்களிடம் அவர்கள் ''உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரையில்'' எருசலேமில் இருக்கும்படி கட்டளையிட்டார். இல்லாவிட்டால் அவர்கள் பெலனில்லாதவர்களாக இருப்பார்கள் என்பதை அவர் அறிந்திருந்தார். அவர்கள் நிச்சயமாக அவர் கொடுத்துள்ள இந்தப் பணியில் தோற்றுப்போவார்கள்.





ஆனால் அவர்கள் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெற்றபோதோ, தேவன் சுவிசேஷத்தைப் பரவச்செய்ய அவர்களை வல்லமையாகப் பயன்படுத்துவதை நாம் காண்கிறோம்.

உலகெங்குமுள்ள இலட்சக்கணக்கான கிறிஸ்தவர்கள் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெற்ற பிறகு, வல்லமையின் புதிய பரிமாணத்தை, குறிப்பாக இரட்சிக்கப்படாதவர்களுக்குச் சாட்சி கூறுவதில், அனுபவித்து வருகிறார்கள். தங்கள் வார்த்தைகள் அதிகமாகப் பாவத்தைக் குறித்து உணர்த்துவதையும், சில வேளைகளில் தாங்கள் அறியாத வேதவசனங்களை மேற்கோளாக எடுத்துச் சொல்லுவதையும் அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். சிலர் சுவிசேஷ ஊழியம் போன்ற சிறப்பான ஊழியத்துக்காக அழைக்கப்பட்டு, அதற்கான வரங்களைப் பெறுகிறார்கள். தேவன் தமது சித்தப்படி பரிசுத்த ஆவியானவரின் பல இயல்புக்கு அப்பாற்பட்ட வரங்களில் தங்களைப் பயன்படுத்திவருவதை மற்றவர்கள் கண்டிருக்கிறார்கள். இவர்களுடைய அனுபவம் முற்றிலும் வேதாகமரீதியானதாகும். இந்த அனுபவங்களை எதிர்ப்பவர்கள் தங்கள் எதிர்ப்புக்கு எந்த வேதாகம ஆதாரத்தையும் பெற்றிருக்கவில்லை. உண்மையில், அவர்கள் தேவனுக்கு விரோதமாகவே போரிடுகிறார்கள்.

கிறிஸ்துவைப் பின்பற்றும்படி அழைக்கப்பட்டுள்ள நாம், பரிசுத்த ஆவியானவரோடுள்ள அவருடைய அனுபவத்தையும் பின்பற்றும்படி அழைக்கப்பட்டிருப்பதில் வியப்பேதுமில்லை. அவர் மரியாளின் கர்ப்பத்தில் சிசுவானபோதே ஆவினாலே பிறந்திருந்தார் [பார்க்க, மத். 1:20]. ஆவியினாலே பிறந்த அவர் தமது ஊழியத்தைத் துவங்குவதற்கு முன்பாகப் பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் செய்விக்கப்பட்டார் [பார்க்க, மத். 3:16]. ஊழியத்துக்காக ஆயத்தப்படுத்தப்படும்படி இயேசுவானவரே பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெற வேண்டியிருக்குமானால் நமக்கு அது இன்னுமதிகமாகத் தேவையாக இருக்குமல்லவா?

### ஆவியானவரின் ஞானஸ்நானத்தின் துவக்கச் சான்று

ஒரு விசுவாசி பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெறும்போது அதற்கான துவக்கச் சான்று அவர் ஒரு புதிய பாஷையில் பேசுவதாகும். வேதாகமம் இதை ''அந்நிய பாஷை'' என்று அழைக்கிறது. இந்த உண்மைக்குப் பல வேதாகம ஆதாரங்கள் இருக்கின்றன. அவைகளை நாம் பார்ப்போம்.

முதலாவதாக, இயேசுவானவர் தாம் பரத்துக்கேறுவதற்கு முன்பாக தம்முடைய சீஷர்களிடம் விசுவாசிகளுக்கு ஒரு அடையாளம் அவர்கள் புதிய பாஷைகளில் பேசுவார்கள் என்று சொல்லியிருக்கிறார்:

> நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ள

> வனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படு வான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான். *விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன:* என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; *நவமான பாஷைகளைப் பேசுவார்கள்* [மாற்கு 16:15—17 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

சில வேதாகம விரிவுரையாளர்கள் இந்த வசனங்கள் நமது வேதாகமத்தில் இருக்கக் கூடாது, ஏனென்றால் புதிய ஏற்பாட்டின் சில பழைய கைப்பிரதிகளில் அவை சேர்க்கப்பட்டிருக்கவில்லை என்று வாதிடுகிறார்கள். ஆனால் பெரும்பாலான பழைய கைப்பிரதிகளில் இந்த வசனங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. நான் வாசித்த பல ஆங்கில மொழி பெயர்ப்புகளிலும் இந்த வசனங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. மேலும் இயேசுவானவர் இந்த வசனங்களில் சொல்லியிருப்பது நடபடிகளின் நூலில் சொல்லப்பட்டிருப்பதுபோல துவக்ககாலச் சபையின் அனுபவத்துக்குப் பொருத்தமாக இருக்கிறது.

விசுவாசிகள் துவக்கத்தில் பரிசுத்த ஆவியானவரால் ஞானஸ் நானம் செய்விக்கப்பட்டிருப்பதற்கு நடபடிகளின் நூலில் ஐந்து எடுத்துக் காட்டுகள் இருக்கின்றன. இவைகளை ஒவ்வொன்றாகப் பார்க்கும் போது, இந்த இரண்டு கேள்விகளை நமக்கு நாமே கேட்டுக்கொள்ளு வோம்: 1] பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் இரட்சிப்புக்குப் பின்வரும் ஒரு அனுபவமா? 2] இதைப் பெற்றுக்கொண்டவர்கள் அந்நிய பாஷைகளில் பேசினார்களா? இன்று விசுவாசிகளுக்கான தேவனுடைய சித்தத்தைப் புரிந்துகொள்ள இது நமக்கு உதவும்.

### எருசலேம்

அப்போஸ்தலர் 2ஆம் அதிகாரத்தில் நாம் முதல் எடுத்துக் காட்டைக் காண்கிறோம். பெந்தெகொஸ்தே நாளில் நூற்றிருபது சீஷர்கள் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெற்றார்கள்.

> பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர் களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்க முண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அல்லாமலும் அக்கினி மயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. *அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக் குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு*





> *பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்* [அப். 2:1—4 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

இதற்கு முன்பாகவே அந்த நூற்றிருபது விசுவாசிகளும் இரட்சிக்கப்பட்டு, மறுபடியும் பிறந்திருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. எனவே அவர்கள் இரட்சிப்புக்குப் பிறகே பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தை அனுபவித்தார்கள். அதுவரையில் பரிசுத்த ஆவியானவர் சபைக்குக் கொடுக்கப்பட்டிராததால் அவர்கள் இதற்கு முன்பே பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெற்றிருக்க முடியாது.

தொடர்ந்து காணப்பட்ட அடையாளம் அந்நிய பாஷைகளைப் பேசியது என்பதும் தெளிவாக இருக்கிறது.

### சமாரியா

விசுவாசிகள் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெறுவதின் இரண்டாவது எடுத்துக்காட்டை நாம் அப்போஸ்தலர் 8ஆம் அதிகாரத்தில் காண்கிறோம். பிலிப்பு சமாரியா பட்டணத்துக்குச் சென்று அங்கே சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்.

> தேவனுடைய ராஜ்யத்துக்கும் இயேசுகிறிஸ்து வினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக் குறித்து, பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்தபோது, புருஷரும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள். அப்பொழுது சீமோனும் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்று, பிலிப்பைப் பற்றிக்கொண்டு, அவனால் நடந்த அடையாளங்களையும் பெரிய அற்புதங்களையும் கண்டு பிரமித்தான். சமாரியர் தேவவசனத்தை ஏற்றுக் கொண்டதை எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள் கேள்விப்பட்டு, பேதுருவையும் யோவானையும் அவர்களிடத்திற்கு அனுப்பினார்கள். இவர்கள் வந்த பொழுது அவர்களில் ஒருவனும் பரிசுத்த ஆவியைப் பெறாமல் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானத்தை மாத்திரம் பெற்றிருந்தவர்களாகக் கண்டு, அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளும்படி அவர்களுக்காக ஜெபம்பண்ணி... [அப். 8:12—16].

சமாரியக் கிறிஸ்தவர்கள் தங்கள் இரட்சிப்புக்குப் பிறகு இரண்டாவது அனுபவமாகவே பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ் நானத்தைப் பெற்றார்கள். பேதுருவும் யோவானும் அங்கே செல்லுவதற்கு முன்பாகவே மக்கள் ‘‘தேவனுடைய வசனத்தை ஏற்றுக் கொண்டு’’, சுவிசேஷத்தை விசுவாசித்து, ஜலத்தினாலே ஞானஸ்

நானம் பெற்றிருந்தார்கள். பேதுருவும் யோவானும் அவர்களுக்காக ஜெபித்தபோது, ''அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளும்படி அவர்களுக்காக'' ஜெபித்தார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது மிகவும் தெளிவாக இருக்கிறது அல்லவா?

சமாரிய விசுவாசிகள் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெற்றபோது, அவர்கள் அந்நிய பாஷையில் பேசினார்களா? வேதாகமம் இதைப் பற்றிச் சொல்லாவிட்டாலும், ஒரு விநோதமான காரியம் நடந்ததை அது அறிவிக்கிறது. சமாரியக் கிறிஸ்தவர்களின்மீது பேதுருவும் யோவானும் கைகளை வைத்தபோது, நடந்ததைக் கண்ட சீமோன் என்பவன் பணத்தைக் கொடுத்துப் பரிசுத்த ஆவியானவரைக் கொடுக்கும் திறனைப் பெற விரும்பினான்.

> அவர்கள்மேல் கைகளை வைத்தார்கள், அப்பொழுது அவர்கள் பரிசுத்தஆவியைப் பெற்றார்கள். அப்போஸ்தலர் தங்கள் கைகளை அவர்கள்மேல் வைத்ததினால் பரிசுத்த ஆவி தந்தருளப்படுகிறதைச் சீமோன் கண்டபோது, அவர்களிடத்தில் பணத்தைக் கொண்டுவந்து: நான் எவன்மேல் என் கைகளை வைக்கிறேனோ, அவன் பரிசுத்தஆவியைப் பெறத் தக்கதாக எனக்கும் இந்த அதிகாரத்தைக் கொடுக்க வேண்டும் என்றான் [அப். 8:17–19].

சீமோனிடம் அதிகமாகத் தாக்கத்தை ஏற்படுத்திய அளவுக்கு நடந்தது என்ன? அவன் ஏற்கெனவே மக்கள் பிசாசின் பிடியிலிருந்து விடுவிக்கப்படுதல், திமிர்வாதக்காரர்களும் சப்பாணிகளும் குணமாக்கப் படுதல் ஆகிய அற்புதங்களை அவன் கண்டிருக்கிறான் [பார்க்க, அப். 8:5–7]. அவன் ஏற்கெனவே மந்திரசக்தியின் மூலம் சமாரிய மக்களை வியப்படைய வைத்திருந்தான் [பார்க்க, அப். 8:9–10]. எனவே, பேதுருவும் யோவானும் ஜெபித்தபோது, அவன் அதுவரையிலும் பார்க்காத ஒரு அற்புதமான காரியத்தைச் சீமோன் கண்டிருக்க வேண்டும். நடபடிகளின் புத்தகத்தில் கிறிஸ்தவர்கள் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெற்ற மற்ற வேளைகளில் நடந்ததுபோன்ற அதே காரியம் இப்போதும் நடப்பதையே அவன் கண்டிருக்க வேண்டும் – அவர்கள் அந்நிய பாஷைகளில் பேசுவதை அவன் கண்டான், கேட்டான்.

### தமஸ்குவில் சவுல்

பின்னால் அப்போஸ்தலனாகிய பவுல் என்று அறியப்பட்ட தர்சு பட்டணத்து சவுலின் அனுபவமே நடபடிகளின் புத்தகத்தில் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்துக்கு மூன்றாவது எடுத்துக்காட்டாகக் கொடுக்கப்பட்டுள்ளது. அவர் தமஸ்குவிக்குச் செல்லும் சாலையில்





இரட்சிக்கப்பட்டிருந்தார். அப்போதிலிருந்தே அவர் தாற்காலிகமாகப் பார்வையை இழந்திருந்தார். அவருடைய மனமாற்றத்துக்கு மூன்று நாட்களுக்குப் பிறகு தேவனால் அனுப்பப்பட்ட அனனியா என்பவன் அவரைச் சந்திக்க வந்தான்.

> அப்பொழுது அனனியா போய், வீட்டுக்குள் பிரவேசித்து, அவன்மேல் கையை வைத்து: சகோதர னாகிய சவுலே, நீ வந்த வழியிலே உனக்குத் தரிசன மான இயேசுவாகிய கர்த்தர், நீ பார்வையடையும் படிக்கும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்படும்படிக்கும் என்னை அனுப்பினார் என்றான். உடனே அவன் கண்களிலிருந்து மீன் செதில்கள் போன்றவைகள் விழுந்தது. அவன் பார்வையடைந்து, எழுந்திருந்து, ஞானஸ்நானம் பெற்றான் [அப். 9:17–18].

அனனியா சவுலுக்காக ஜெபிக்கும்படி வருவதற்கு முன்பாகவே அவர் மறுபடியும் பிறந்திருந்தார் என்பது நிச்சயமாகும். அவர் தமஸ்குவுக்குச் செல்லும் சாலையிலேயே ஆண்டவராகிய இயேசுவின்மேல் விசுவாசம் வைத்தார். உடனடியாகவே தனது புதிய ஆண்டவரின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தார். மேலும் அனனியா சவுலை முதன் முதலாகச் சந்தித்தபோது ''*சகோதரனாகிய சவுலே*'' என்று அழைத்தான். இப்போது சவுல் பார்வையைப் பெறும்படியாகவும், பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்படும்படிக்கும் தான் வந்திருப்பதாக அனனியா அவரிடம் கூறினான். எனவே சவுல் இரட்சிக்கப்பட்டு மூன்று நாட்கள் கழித்து பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டார் அல்லது பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றார்.

சவுல் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெறும் நிகழ்ச்சி வேதாகமத்தில் குறிப்பிடப்படவில்லை. அனனியா வந்தவுடன் அது நடந்திருக்க வேண்டும். சவுல் அந்நிய பாஷையில் பேசினார் என்பதிலும் சந்தேகமில்லை. ஏனென்றால் பவுல் பின்னால் 1 கொரிந்தியர் 14:18 வசனத்தில் ''உங்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப் பாஷைகளைப் பேசுகிறேன், இதற்காக என் தேவனை ஸ்தோத்திரிக் கிறேன்'' என்று சொல்லியிருக்கிறார்.

### செசரியா

அப்போஸ்தலர் 10ஆம் அதிகாரத்தில் விசுவாசிகள் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெறுவதைக் குறித்த எடுத்துக் காட்டை நாம் காண்கிறோம். அப்போஸ்தலனாகிய பேதுரு செசரியாவிலிருந்த கொர்நேலியுவின் வீட்டாருக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி தேவனால் அனுப்பப்பட்டிருந்தார். இயேசுவில் விசுவாசத்தின்மூலம் இரட்சிப்பைப் பெற முடியும் என்பதைப் பேதுரு வெளிப்படுத்தியவுடன்

புறஜாதியார் எல்லோருமே உடனடியாக விசுவாசத்தில் அதற்குச் செவி சாய்த்தார்கள். அப்போதே பரிசுத்த ஆவியானவர் அவர்கள்மீது இறங்கினார்.

> இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசிக்கொண்டிருக்கையில் வசனத்தைக் கேட்டவர்கள் யாவர் மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். அவர்கள் பல பாஷைகளைப் பேசுகிறதையும், தேவனைப் புகழுகிறதையும், பேதுருவோடுகூட வந்திருந்த விருத்தசேதனமுள்ள விசுவாசிகள் கேட்கும்போது, பரிசுத்த ஆவியின் வரம் புறஜாதிகள்மேலும் பொழிந்தருளப்பட்டதைக் குறித்துப் பிரமித்தார்கள். அப்பொழுது பேதுரு நம்மைப்போலப் பரிசுத்த ஆவியைப் பெற்ற இவர்களும் ஞானஸ்நானம் பெறாதபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா என்று சொல்லி, கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுக்கும்படி கட்டளையிட்டான் [அப். 10:44—48அ].

முதன்முதலாக இயேசுவை விசுவாசித்த புறஜாதியாரான கொர்நேலியுவின் குடும்பத்தார் மறுபடியும் பிறந்த அதே வேளையில் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்ானத்தையும் பெற்றார்கள் என்பது தெரிகிறது.

வேதவசனங்களின் பின்னணியையும், வரலாற்றுப் பின்னணியையும் நாம் ஆராய்ந்து பார்க்கும்போது, புறஜாதி விசுவாசிகள் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெறுவதற்காக ஏன் பேதுருவும் அவரோடு சென்ற விசுவாசிகளும் அவர்கள்மீது கைகளை வைக்கும் வரையில் தேவன் காத்திருக்கவில்லை என்பது தெரிகிறது. பேதுருவும் மற்ற யூத விசுவாசிகளும் புறஜாதியாரும் இரட்சிக்கப்படுவார்கள், அதிலும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெறுவார்கள் என்று நம்புவதற்கு அதிகமாகச் சிரமப்பட்டார்கள். அவர்கள் அநேகமாகக் கொர்நேலியுவின் வீட்டார் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெறும்படி ஜெபித்திருக்க மாட்டார்கள். எனவேதான் தேவன் தாமே செயல்பட்டார். தேவன் தாம் புறஜாதியாரிடம் காட்டும் அற்புதமான கிருபையைக் குறித்து பேதுருவுக்கும் அவரோடு சென்றவர்களுக்கும் போதித்துக்கொண்டிருந்தார்.

கொர்நேலியுவின் வீட்டார் மெய்யாகவே பரிசுத்த ஆவியானவரைப் பெற்றார்கள் என்ற உறுதிப்பாட்டை எது பேதுருவுக்கும் அவரோடு சென்றவர்களுக்கும் கொடுத்தது? லூக்கா அவர்கள் பல பாஷைகளைப் பேசுகிறதையும் தேவனைப் புகழுகிறதையும் பேதுருவும் அவரோடு சென்றவர்களும் கண்டார்கள் என்று எழுதியிருக்கிறார் [அப். 10:45]. அந்தப் புறஜாதியாரும் பெந்தெகொஸ்தே நாளில் நூற்றிருபது பேரும்





பெற்றதுபோலப் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றிருக்கிறார்கள் என்று பேதுரு அறிவித்தார் [பார்க்க, 10:47].

## எபேசு

விசுவாசிகள் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெறுவது குறித்த ஐந்தாவது எடுத்துக்காட்டு அப்போஸ்தலர் 19ஆம் அதிகாரத்தில் காணப்படுகிறது. எபேசுவின் வழியாகப் பயணம் சென்றபோது அப்போஸ்தலனாகிய பவுல் சில விசுவாசிகளைச் சந்தித்து, ‘‘நீங்கள் விசுவாசிகளானபோது, பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா’’ என்று கேட்டார் [அப். 19:2].

புதிய ஏற்பாட்டு நிருபங்களில் பெரும்பகுதியை எழுதிய பவுல் இயேசுவானவரில் விசுவாசம் வைத்தாலும் பரிசுத்த ஆவியானவரைப் பெறாமல் இருக்கலாம் என்று விசுவாசித்தார் என்பது தெளிவாகிறது. இல்லாவிட்டால் அவர் இப்படிப்பட்ட கேள்வியைக் கேட்டிருக்க மாட்டார்.

தாங்கள் பரிசுத்த ஆவியானவர் உண்டென்றே கேள்விப்படவில்லை என்று பதிலளித்தார்கள். உண்மையில், அவர்கள் தங்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்த யோவான்ஸ்நானனின் மூலமாக மேசியா வரவிருக்கிறார் என்பதைப் பற்றி மட்டுமே கேள்விப்பட்டிருந்தார்கள். பவுல் உடனடியாக அவர்களுக்குக் கிறிஸ்தவ ஞானஸ்நானத்தைக் கொடுத்தார். இறுதியாக அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெறும்படி பவுல் அவர்களின் மேல் தமது கைகளை வைத்தார்:

> அதைக் கேட்டபோது அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள். அல்லாமலும் பவுல் அவர்கள்மேல் கைளை வைத்தபோது, பரிசுத்தஆவி அவர்கள்மேல் வந்தார்; அப்பொழுது அவர்கள் அந்நியபாஷைகளைப் பேசித் தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள். அந்த மனுஷரெல்லாரும் ஏறக்குறைய பன்னிரண்டு பேராயிருந்தார்கள் [அப். 19:5—7].

பவுல் அப்போஸ்தலனைச் சந்தித்த அந்தப் பன்னிருவரும் மறுபடியும் பிறந்தவர்களாக இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, இரட்சிப்புக்குப் பின்னரே பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் வருகிறது என்பது இந்தப் பகுதியிலிருந்து தெளிவாகிறது. மறுபடியுமாக, பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்துக்கு அடையாளமாக இவர்கள் அந்நிய பாஷையில் பேசினார்கள் [தீர்க்கதரிசனமும் சொன்னார்கள்].

## தீர்ப்பு

இந்த ஐந்து எடுத்துக்காட்டுக்களையும் நாம் மறுஆய்வு செய்வோம். குறைந்தபட்சம் இதில் நான்கு எடுத்துக்காட்டுக்களில்

பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் இரட்சிப்புக்குப் பின்வருவது என்பது தெளிவாகத் தெரிகிறது.

இவைகளில் மூன்றில் ஞானஸ்நானத்தைப் பெற்றவர்கள் அந்நிய பாஷைகளைப் பேசினார்கள் என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. மேலும் அனனியா பவுலைச் சந்தித்தபோது பவுல் பெற்ற ஆவியானவரின் ஞானஸ்நானத்தைக் குறித்து விவரிக்கப்படவில்லை. ஆனால் அவர் பின்னால் அந்நிய பாஷைகளில் பேசினார் என்பது நமக்குத் தெரிகிறது. இதுவே நான்காவது எடுத்துக்காட்டாகும்.

எஞ்சியிருக்கும் எடுத்துக்காட்டில், சமாரியர்கள் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றபோது, இயல்புக்கு அப்பாற்பட்ட ஒரு காரியம் நடந்ததினால்தான் சீமோன் பரிசுத்த ஆவியானவரைக் கொடுக்கும் சக்தியை விலைகொடுத்து வாங்க முயன்றான்.

இவ்வாறு சான்றுகள் தெளிவாக இருக்கின்றன. துவக்க காலச் சபையில் மறுபடியும் பிறந்த விசுவாசிகள் பரிசுத்த ஆவியானவரோடு இரண்டாவது அனுபவத்தைப் பெற்றார்கள். அப்போது அவர்கள் அந்நியா பாஷைகளைப் பேசினார்கள். இது நமக்கு வியப்பை அளிக்கக் கூடாது. ஏனென்றால் இயேசுவானவர்தாமே தம்மை விசுவாசிப்பவர்கள் நவமான பாஷைகளைப் பேசுவார்கள் என்று சொல்லியிருக்கிறார்.

எனவே மறுபடியும் பிறந்த ஒவ்வொருவரும் பரிசுத்த ஆவியான வரின் மற்றொரு கிரியையையும் அனுபவிக்க வேண்டும் என்பது முடிவான நிரூபணமாக இருக்கிறது – அவர்கள் பரிசுத்த ஆவியான வரின் ஞானஸ்நானத்தைப் பெற வேண்டும். மேலும், ஒவ்வொரு விசுவாசியும் பரிசுத்த ஆவியானவரைப் பெறும்போது, அந்நிய பாஷையில் பேசுவதையும் நாம் எதிர்பார்க்க வேண்டும்.

### பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெறுவது எப்படி

தேவனுடைய எல்லா வரங்களையும்போலவே நாம் பரிசுத்த ஆவியானவரையும் விசுவாசத்தினாலே பெற்றுக்கொள்ளுகிறோம் [பார்க்க, கலா. 3:5]. பெற்றுக்கொள்ளத் தக்கதான விசுவாசத்தைப் பெற வேண்டுமானால், தான் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெறுவது தேவனுடைய சித்தம் என்ற உறுதிப்பாட்டை விசுவாசி பெற வேண்டும். அவர் ஆச்சரியப்பட்டாலோ அல்லது சந்தேகப்பட்டாலோ அவர் பெற்றுக்கொள்ள மாட்டார் [பார்க்க, யாக். 1:6–7].

பரிசுத்த ஆவியானவரைப் பெறுவது தனக்கான தேவனுடைய சித்தம் என்று நம்பாமலிருப்பதற்கு விசுவாசி சரியான காரணத்தைப் பெற்றிருக்கவில்லை. ஏனென்றால் இதைக் குறித்த தேவனுடைய சித்தத்தை இயேசுவானவர் தெளிவாக வெளிப்படுத்தியிருக்கிறார்:

> பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரம





> பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர் களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா [லூக்கா 11:13].

இயேசுவானவரால் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம், தான் பரிசுத்த ஆவியானவரைப் பெறுவது தேவனுடைய சித்தமே என்ற உறுதிப் பாட்டை தேவனுடைய ஒவ்வொரு பிள்ளைக்கும் கொடுக்க வேண்டும்.

இதே வசனம் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் இரட்சிப்புக்குப் பிறகு வருகிறது என்ற சத்தியத்துக்கும் ஆதாரமாக இருக்கிறது. ஏனென்றால், இயேசுவானவர் அவர்கள் பரிசுத்த ஆவியானவருக்காக ஜெபித்தால் தேவன் அதை அருளுவார் என்று தேவனுடைய பிள்ளைகளிடமே [இவர்கள் மட்டுமே தேவனைப் ''பரம பிதாவாகக்'' கொண்டிருக்கிறார்கள்] இந்த வாக்குத்தத்தத்தைக் கொடுத்தார். இரட்சிப்பின் வேளையில் பரிசுத்த ஆவியானவரின் மூலமாக மறுபடியும் பிறப்பதே விசுவாசி அனுபவிக்கும் ஒரே அனுபவமாக இருக்குமானால் இயேசுவின் வாக்குத்தத்தத்துக்கு அர்த்தமில்லாமல் போய்விடும். நவீன இறையியலாளர்களைப் போலல்லாமல் இயேசுவானவர் ஏற்கெனவே மறுபடியும் பிறந்தவர்கள் பரிசுத்த ஆவியானவருக்காக வேண்டிக்கொள்ளுவது பொருத்தமானது என்றே விசுவாசித்தார்.

இயேசுவானவரைப் பொருத்தவரையில் ஒருவர் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்ள வேண்டுமானால், இரண்டு நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டும். முதலாவதாக, தேவன் ஒருவருடைய பிதாவானவராக இருக்க வேண்டும், அதாவது, அவர் மறுபடியும் பிறக்க வேண்டும். இரண்டாவதாக, நீங்கள் அவரிடம் பரிசுத்த ஆவியானவருக்காக வேண்டிக்கொள்ள வேண்டும்.

கைகளை வைப்பதின்மூலம் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொள்ளுவது வேதாகமரீதியானதாக இருந்தாலும் [பார்க்க, அப். 8:17; 19:6] இது கண்டிப்பாக அவசியம் என்று சொல்ல முடியாது. எந்தவொரு கிறிஸ்தவரும் தான் தனியாக ஜெபிக்கும்போது, பரிசுத்த ஆவியான வரைப் பெற்றுக்கொள்ள முடியும். அவர் கேட்டு, விசுவாசத்தினாலே பெற்றுக்கொள்ள வேண்டும். ஆவியானவர் வார்த்தைகளைக் கொடுக்கிறபடி அந்நிய பாஷையில் பேசத் துவங்க வேண்டும்.

### பொதுவான பயங்கள்

சிலர் தாங்கள் பரிசுத்த ஆவியானவருக்காக ஜெபித்தால் அசுத்த ஆவி உள்ளே நுழைய அது இடம் கொடுத்துவிடுமோ என்று பயப்படு கிறார்கள். ஆனால் இதற்கு ஆதாரமேயில்லை. இயேசுவானவர் இப்படி வாக்குத்தத்தம் அருளியிருக்கிறார்:

உங்களில் தகப்பனாயிருக்கிற ஒருவனிடத்தில் மகன் அப்பங்கேட்டால், அவனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக் கேட்டால் மீனுக்குப் பதிலாய்ப் பாம்பைக் கொடுப்பானா? அல்லது முட்டையைக் கேட்டால், அவனுக்குத் தேளைக் கொடுப்பானா? பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா [லூக்கா 11:11–13].

நாம் தேவனிடம் பரிசுத்த ஆவியானவரைக்குறித்து வேண்டிக்கொள்ளுவோமானால், அவர் பரிசுத்த ஆவியானவரையே கொடுப்பார், வேறு எதையும் கொடுக்க மாட்டார்.

சிலர் தாங்கள் அந்நிய பாஷைகளைப் பேசும்போது பரிசுத்த ஆவியானவர் கொடுக்கும் இயல்புக்கு அப்பாற்பட்ட பாஷையைப் பேசாமல், தாங்களாகவே ஒரு அர்த்தமில்லாத பாஷையைப் பேசிவிடுவோமோ என்று கவலைப்படுகிறார்கள். என்றாலும், பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெறுவதற்கு முன்பாக நீங்களாகவே ஒரு அர்த்தமுள்ள மொழியைக் கண்டுபிடிக்க முயன்றாலும் அது இயலாத காரியம் என்றே காண்பீர்கள். நீங்கள் அந்நிய பாஷயில் பேசும்போது உங்கள் நாவையும், உதடுகளையும், குரல்நாண்களையும் பயன்படுத்த வேண்டியிருக்கும். ஏனென்றால் பரிசுத்த ஆவியானவர் உங்களுக்காகப் பேச மாட்டார், அவர் உங்களுக்குப் பாஷையை மட்டுமே கொடுப்பார். அவர் நமக்காகச் *செய்பவர்* அல்ல நமது *சகாயராக* இருக்கிறார். வேதாகமம் போதிக்கிறபடி நீங்களே பேச வேண்டும்:

அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, *ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே* வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள் [அப். 2:4 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

அல்லாமலும் பவுல் அவர்கள்மேல் கைகளை வைத்தபோது, பரிசுத்தஆவி அவர்கள்மேல் வந்தார்; அப்பொழுது *அவர்கள்* அந்நியபாஷைகளைப் பேசித் தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள் [அப். 19:6 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

ஒரு விசுவாசி பரிசுத்த ஆவியானவரின் வரத்துக்காக வேண்டிக்கொண்ட பிறகு, தான் அந்நிய பாஷையில் பேசுவதை





விசுவாசித்து அதை எதிர்பார்க்க வேண்டும். விசுவாசத்தினாலே பரிசுத்த ஆவியானவரைப் பெறுகிறபடியால், பெற்றுக்கொள்ளுபவர் சில குறிப்பிட்ட உணர்வுகளையோ, சரீரப்பிரகாரமான கிளர்ச்சிகளையோ அனுபவிப்பதை எதிர்பார்க்கக் கூடாது. அவர் வெறுமனே தனது வாயைத் திறந்து பரிசுத்த ஆவியானவர் அவருக்குக் கொடுக்கும் பாஷைக்கு ஏற்ப பதிய தொனிகளையும், அசைகளையும் உண்டாக்க வேண்டும். விசுவாசி *விசுவாசத்தினால் பேசத்* துவங்காவிட்டால் அவருடைய வாயிலிருந்து எந்த வார்த்தைகளும் வெளிவராது. அவரே பேச வேண்டும், பரிசுத்த ஆவியானவர் பேசும் வரத்தைக் கொடுப்பார்.

## வரத்தின் ஆதாரம்

ஒரு விசுவாசி அந்நிய பாஷையில் ஜெபிக்கும்போது, அவருடைய மனம் அல்ல, ஆவியே ஜெபிக்கிறது என்று பவுல் சொல்லுகிறார்.

என்னத்தினாலெனில், நான் அந்நிய பாஷையில் விண்ணப்பம்பண்ணினால், என் ஆவி விண்ணப்பம் பண்ணுமேயன்றி, என் கருத்து பயனற்றதாயிருக்கும். இப்படியிருக்க, செய்ய வேண்டுவதென்ன? நான் ஆவியோடும் விண்ணப்பம்பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம்பண்ணுவேன்; நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன் [1 கொரி. 14:14–15].

தான் அந்நிய பாஷையில் ஜெபித்தபோது, தனது கருத்து பயனற்றதாக இருக்கிறது என்று பவுல் சொல்லியிருக்கிறார். அதாவது அவருடைய மனம் அதில் பங்கெடுக்கவில்லை என்றும், தான் அந்நிய பாஷையில் ஜெபிப்பது என்ன என்று அவருக்குத் தெரியாது என்றும் இதற்கு அர்த்தமாகும். எனவே தான் என்ன ஜெபிக்கிறோம் என்பது புரியாமல் எப்போதும் அந்நிய பாஷையில் ஜெபித்துக்கொண்டிருப்பதற்கு மாறாகத் தான் தனது சொந்த மொழியில் கருத்தோடு ஜெபிப்பதாகவும் சொல்லியிருக்கிறார். அவர் அந்நிய பாஷையில் பாடுவதற்காக மட்டுமின்றி, தனது சொந்த பாஷையில் பாடுவதற்காகவும் நேரம் செலவழித்தார். இரண்டு வகைப்பட்ட ஜெபத்துக்கும் பாட்டுக்கும் இடம் இருக்கிறது, நாம் பவுலின் சமநிலையான எடுத்துக்காட்டைப் பயன்படுத்த வேண்டும்.

பவுலைப் பொருத்த வரையில் தனது சொந்த பாஷையில் பேசுவதைப் போலவே அந்நிய பாஷையில் பேசுவதும் அவருடைய சித்தத்துக்குக் கட்டுப்பட்டது என்பதைக் கவனியுங்கள். ''*நான்* ஆவியோடும் விண்ணப்பம்பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன்'' என்று அவர் சொல்லியிருக்கிறார். இப்போது அந்நிய பாஷைகளில் பேசுவது ஆவியானவரிடமிருந்து வரும் வரமாக

இருக்குமானால், ஒருவரால் அதைக் கட்டுப்படுத்த முடியாதிருக்கும். அப்படிக் கட்டுப்படுத்தினால் அது தேவனைக் கட்டுப்படுத்துவதாக ஆகிவிடும் என்று சில விமரிசகர்கள் குறைகூறுகிறார்கள். ஆனால் இதற்கு ஆதாரமில்லை. இப்போதும் அப்போதும் அந்நிய பாஷையில் பேசுவது தனிப்பட்டவரின் கட்டுப்பாட்டில் இருக்கும்படியாகவே தேவன் திட்டமிட்டிருக்கிறார். கைகள் *மெய்யாகவே* தேவனால் உருவாக்கப் பட்டிருக்கிறபடியால், எவரும் கைகளைக் கட்டுப்படுத்த முயலக் கூடாது என்றும், அப்படி தாங்களாகவே தங்கள் கைகளைக் கட்டுப் படுத்த முயலுகிறவர்கள் தேவனைக் கட்டுப்படுத்த முயலுகிறார்கள் என்றுகூட இந்த விமரிசகர்கள் சொல்லக் கூடும்!

நீங்கள் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெற்ற பிறகு, அந்நிய பாஷையில் பேசுவது உங்கள் மனதிலிருந்து வரவில்லை, ஆவியிலிருந்தே வருகிறது என்பதை எளிதாக நிரூபிக்க முடியும். முதலில், இந்தப் புத்தகத்தை வாசிக்கும் அதே வேளையில் ஒருவரோடு உரையாடலைத் துவங்குங்கள். இரண்டையும் ஒரே வேளையில் செய்ய முடியாது என்பதையே நீங்கள் காண்பீர்கள். ஆனால் நீங்கள் இந்தப் புத்தகத்தைத் தொடர்ந்து வாசித்துக்கொண்டிருக்கும் போதே, தொடர்ந்து அந்நிய பாஷையில் பேச முடியும் என்பதைக் காண்பீர்கள். நீங்கள் அந்நிய பாஷையைப் பேச உங்கள் மனதைப் பயன்படுத்தவில்லை என்பதே இதற்குக் காரணமாகும். அது உங்கள் ஆவியிலிருந்து வருகிறது. எனவே ஜெபிக்கும்படி உங்கள் ஆவியை நீங்கள் பயன்படுத்தும்போது, வாசித்துப் புரிந்துகொள்ள முடியும்.

## இப்போது நீங்கள் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெற்றிருக்கிறபடியால்...

தேவன் உங்களுக்குப் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத் தைக் கொடுத்திருப்பதற்கான அடிப்படைக் காரணத்தைக் கருத்தில் கொண்டிருங்கள் – ஆவியானவரின் கனி மற்றும் வரங்கள் வெளிப் படுத்தப்படுவதின் மூலமாக நீங்கள் அவருக்குச் சாட்சியாக இருக்கும் படி உங்களைப் பலப்படுத்துவதே அடிப்படை நோக்கமாகும் [பார்க்க, 1 கொரி. 12:4–11; கலா. 5:22–23]. கிறிஸ்துவைப் போன்ற வாழ்க்கை வாழ்ந்து, அவருடைய அன்பையும், சந்தோஷத்தையும், சமாதானத் தையும் உலகத்துக்கு வெளிப்படுத்தி, இயல்புக்கு அப்பாற்பட்ட ஆவியானவரின் வரங்களை வெளிப்படுத்தச் செய்வதின் மூலமாக தேவன் மற்றவர்களைத் தம்மிடம் இழுப்பதற்கு உங்களைப் பயன்படுத்து வார். அந்நிய பாஷையில் பேசும் வரம் என்பது உங்களுக்குள்ளிருந்து பாய்ந்து வரும் ஜீவத்தண்ணீர் ஆறுகளில் ஒன்று மட்டுமேயாகும்.

உலகத்திலுள்ள *எல்லா* மக்களுக்கும் சுவிசேஷத்தை அறிவிக்கும் படி நம்மைப் பலப்படுத்துவதற்காகவே தேவன் தமது பரிசுத்த ஆவியான





வரைக் கொடுத்திருக்கிறார் என்பதையும் நினைவில் வைத்திருங்கள் [பார்க்க அப். 1:8]. நீங்கள் அந்நிய பாஷையில் பேசும்போது, அது அந்நிய நாட்டில் தொலைதூரத்திலுள்ள ஒரு பழங்குடி இனத்தாரின் பாஷையாக இருக்கக்கூடும் என்பதை நீங்கள் உணர வேண்டும். ஒவ்வொரு முறை நீங்கள் அந்நிய பாஷையில் பேசும்போதும், எல்லா பாஷைக்காரரும் இயேசுவை அறிய வேண்டுமென்று தேவன் விரும்புகிறார் என்பதை அது உங்களுக்கு நினைவுபடுத்த வேண்டும். இயேசுவின் பிரதான கட்டளையை நிறைவேற்றுவதில் நாம் எப்படி ஈடுபட வேண்டும் என்று தேவனிடம் வேண்டிக்கொள்ள வேண்டும்.

கூடுமான வரையில் நாம் அந்நிய பாஷையில் பேச வேண்டும். ஆவியில் வல்லமை பெற்றவராகிய பவுல் ''உங்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப் பாஷைகளைப் பேசுகிறேன், இதற்காக என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்'' என்று சொல்லியிருக்கிறார் [1 கொரி. 14:18]. அதிகமாக அந்நிய பாஷை பேசிய ஒரு சபைக்கு [பெரும்பாலும் தவறான வேளைகளில்] அவர் இந்த வார்த்தைகளை எழுதியிருக் கிறார். எனவே அவர்களை விட அதிகமாகப் பேச வேண்டும் என்றால், பவுல் அதிகமான பாஷைகளைப் பேசியிருக்க வேண்டும். அந்நிய பாஷையில் ஜெபிப்பது நமக்குள் வாசம்பண்ணும் பரிசுத்த ஆவியான வரைக் குறித்த தொடர்ந்த உணர்வை நமக்குக் கொடுக்கிறது. அவர் 1 தெசலோனிக்கேயர் 5:17 வசனத்தில் பவுல் போதித்தபடி ''இடை விடாமல் ஜெபம்பண்ணுவதற்கு'' நமக்கு உதவிசெய்வார்.

அந்நிய பாஷையில் பேசுவது விசுவாசிக்குப் பக்திவிருத்தி அளிக்கிறது என்றும் பவுல் போதித்திருக்கிறார் [பார்க்க, 1 கொரி. 14:4]. அதாவது, அது நம்மை ஆவிக்குரிய பிரகாரமாகக் கட்டியெழுப்புகிறது. அந்நிய பாஷையில் ஜெபிப்பதின்மூலம் நாம் அறியாத வகையில் உள்ளான மனுஷனைப் பலப்படுத்த முடியும். அந்நிய பாஷையில் பேசுவது விசுவாசியின் ஆவிக்குரிய வாழ்க்கையை ஒவ்வொரு நாளும் வளப்படுத்த வேண்டும். பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படும்போது ஒரே வேளையில் நடக்கும் ஒரு காரியமாக இது ஆகிவிடக் கூடாது.

நீங்கள் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெற்ற பிறகு, ஒவ்வொரு நாளும் உங்கள் புதிய பாஷையில் தேவனிடம் ஜெபிக்க நேரம் செலவிடும்படி நான் உங்களை ஊக்குவிக்கிறேன். அது உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கைக்கும், அதன் வளர்ச்சிக்கும் அதிக உதவியாக இருக்கும்.

## சில பொதுவான கேள்விகளுக்குப் பதில்கள்

அந்நிய பாஷையில் பேசாத எவரும் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெறவில்லை என்று நம்மால் உறுதியாகக் கூற முடியுமா? தனிப்பட்ட முறையில் நான் அப்படி நினைக்கவில்லை.

நான் மக்கள் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெற வேண்டும் என்று ஜெபிக்கும்போது, அந்நிய பாஷையில் பேசுவதை எதிர்பார்க்குமாறு அவர்களை ஊக்குவித்திருக்கிறேன். அவர்களில் அநேகமாக 95 சதவீதத்தினர் அப்படியே செய்திருக்கிறார்கள். இப்படி ஆயிரக்கணக்கான மக்கள் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெற்றிருக்கிறார்கள்.

ஆனால் ஒருவர் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்துக்காக ஜெபித்து, அந்நிய பாஷையில் பேசாவிட்டால் அவர் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெறவில்லை என்று சொல்ல முடியாது. ஏனென்றால் ஆவியானவரின் ஞானஸ்நானம் விசுவாசத்தினால் பெற்றுக்கொள்ளப்படுகிறது, அந்நிய பாஷையில் பேசுவது தன்னிச்சையானதாகும். என்றாலும், பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்துக்காக ஜெபித்து ஆனால் அந்நிய பாஷையில் பேசியிராத ஒரு விசுவாசியோடு பேசும் வாய்ப்பு எனக்குக் கிடைக்குமானால், முதலில் அதைக் குறித்து நடபடிகளின் புத்தகத்திலுள்ள எல்லா வேதவசனங்களையும் அவருக்குக் காட்டுவேன். பிறகு பவுல் அப்போஸ்தலன் தான் அந்நிய பாஷையில் பேசுவதையும், பேசாமலிருப்பதையும் கட்டுப்படுத்த முடியும் என்று எழுதியிருப்பதை அந்த விசுவாசியிடம் காட்டுவேன். பவுலைப்போல எப்போது விரும்பினாலும் என்னால் அந்நிய பாஷையில் பேச முடியும். எனவே மறுபடியுமாக அந்நிய பாஷையில் பேச வேண்டாம் என்று தீர்மானிக்கவும் என்னால் முடியும். இப்படியிருக்கிறபடியால், நான் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெற்றிருந்தாலும், ஆவியானவர் பேச வரம் கொடுக்கும்போது ஒத்துழைக்காதபடியால் அந்நிய பாஷையில் பேசாமல் இருக்கலாம்.

எனவே, பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்துக்காக ஜெபித்து, ஆனால் அந்நிய பாஷையில் பேசாத ஒரு விசுவாசியோடு பேசும் வாய்ப்பு எனக்குக் கிடைக்குமானால், அவர் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெறவில்லை என்று நான் அவரிடம் சொல்லுவது கிடையாது [அப்படி நான் நம்பவும் இல்லை]. அந்நிய பாஷையில் பேசுவது என்பது நம்முடைய ஒத்துழைப்பு இல்லாமல் பரிசுத்த ஆவியானவர் தானாகவே செய்யும் ஒரு காரியம் இல்லை என்று அவருக்கு விளக்குவேன். பரிசுத்த ஆவியானவர் பேசும் வரத்தைக் கொடுக்கும்போது நாமே நமது சொந்த பாஷையில் பேசுவதுபோல அந்நிய பாஷையில் பேச வேண்டும் என்று அவருக்குச் சொல்லுவேன். பிறகு பரிசுத்த ஆவியானவரோடு ஒத்துழைத்து அந்நிய பாஷையில் பேசுமாறு அந்த நபரை ஊக்குவிப்பேன். எந்தவித விதிவிலக்கும் இல்லாமல் எல்லோரும் அப்படியே செய்வார்கள்.





## எல்லோரும் அந்நிய பாஷையில் பேசுவதில்லை என்று பவுல் எழுதவில்லையா?

பவுலின் ''எல்லாரும் அந்நிய பாஷைகளைப் பேசுகிறார்களா?'' [1 கொரி. 12:30] என்ற பவுலின் கொள்கைரீதியான கேள்விக்கு நாம் ''இல்லை'' என்று பதில் கூறினாலும் இந்தக் கேள்வியைப் புதிய ஏற்பாட்டின் எஞ்சிய பகுதியோடு இசைவாக்கிப் பார்க்க வேண்டும். ஆவிக்குரிய வரங்களைக் குறித்த அவருடைய போதனையின் பின்னணியில் இந்தக் கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது. ஆவிக்குரிய வரங்கள் எல்லாமே பரிசுத்த ஆவியானவரின் சித்தப்படியே வெளியே காட்டப்படுகின்றன. பவுல் ''பற்பல பாஷைகளைப் பேசுதல்'' என்ற வரத்தைக் குறித்துக் குறிப்பாகப் பேசிக்கொண்டிருக்கிறார் [1 கொரி. 12:10]. பவுலைப் பொருத்தவரையில் பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதல் எப்போதுமே இதைத் தொடர்ந்து வர வேண்டும். இந்தக் குறிப்பிட்ட வரமே கொரிந்திய சபையில் அதிகமாக வெளிக்காட்டப்படவில்லை. அவர்கள் பாஷைகளை வியாக்கியானம் செய்யாமல் அந்நிய பாஷைகளில் பேசிக்கொண்டிருந்தார்கள். *''பரிசுத்த ஆவியானவர் ஏன் ஒரு சபையில் ஒருவருக்கு வெளியரங்கமாக அந்நிய பாஷையில் பேசும் வரத்தைக் கொடுத்துவிட்டு, அதற்கு வியாக்கியானம் சொல்லும் வரத்தை மற்றொருவருக்குக் கொடுக்காமல் இருக்க வேண்டும்?''* என்று நாம் கேட்கலாம். அவர் அப்படிச் செய்ய மாட்டார் என்பதே பதிலாகும். இல்லாவிட்டால் பரிசுத்த ஆவியானவர் தேவனுக்குச் சித்தமில்லாத ஒன்றைச் செய்வதுபோலாகிவிடும்.

கொரிந்தியர்கள் சபை ஆராதனைகளில் உரத்த குரலில் அந்நிய பாஷையில் *ஜெபித்திருக்கலாம்*, அவைகளுக்கு வியாக்கியானம் கொடுக்கப்படவில்லை. இப்படியாக, அந்நிய பாஷையில் பேசுவது இரண்டு வெவ்வேறான பயன்களைக் கொண்டிருக்கிறது என்று நாம் அறிகிறோம். ஒருவர் அந்நிய பாஷையில் ஜெபிக்கிறார், இது தனிமையில் செய்யப்பட வேண்டும் என்று பவுல் சொல்லுகிறார். இந்த அந்நிய பாஷைக்கு உடனடியாக வியாக்கியானம் கொடுக்கப்படுவதில்லை. ''நான் அந்நிய பாஷையில் விண்ணப்பம்பண்ணினால், என் ஆவி விண்ணப்பம் பண்ணுமேயன்றி, என் கருத்து பயனற்றதாயிருக்கும்'' என்று அவர் எழுதியிருக்கிறார் [1 கொரி. 14:14]. தான் அந்நிய பாஷையில் பேசியபோது பவுல் எப்போதுமே தான் சொல்லுவது என்ன என்பதை அறிந்திருந்தார் என்று சொல்ல முடியாது என்பது தெளிவாகிறது. வியாக்கியானமும் கொடுக்கப்படவில்லை.

ஆனால் சபையின் பொதுவான கூட்டத்துக்காக அந்நிய பாஷையில் பேசுவது உண்டு. எப்போதுமே இதைத்தொடர்ந்து அந்நிய பாஷைக்கு வியாக்கியானம் கூறும் வரமும் வெளிப்படுத்தப்படும். பரிசுத்த ஆவியானவர் தமது சித்தப்படி ஒருவருக்கு வரத்தைக்

கொடுக்கும்போது இது நடக்கிறது. அந்த நபர் வெளியரங்கமாக அந்நிய பாஷையில் பேசுகிறார், தொடர்ந்து வியாக்கியானம் கொடுக்கப் படுகிறது. ஆனால் தேவன் எல்லோரையும் இப்படிப் பயன்படுத்துவ தில்லை. எனவேதான் எல்லோரும் அந்நிய பாஷையில் பேசுவதில்லை என்று பவுல் எழுதியிருக்கிறார். தேவன் எல்லோரையும் பாஷைக்கு வியாக்கியானம் கொடுக்கும் வரத்தில் பயன்படுத்தாதிருப்பதுபோல, எல்லோரையும் பாஷைகளைப் பேசும் வரத்திலும் பயன்படுத்தாதிருக் கிறார். இதுவே ''எல்லாரும் அந்நிய பாஷைகளைப் பேசுகிறார்களா?'' என்ற பவுலின் கேள்வியை வேதாகமத்தின் எஞ்சிய பகுதியோடு ஒப்புரவாக்குவதற்கு ஒரே வழியாகும்.

பவுல் செய்ததுபோல எந்த வேளையிலும் என்னால் அந்நிய பாஷையில் பேச முடியும். எனவே நானோ அல்லது பவுலோ அந்நிய பாஷையில் பேசும்போது, ''ஆவியானவரின் சித்தப்படி மட்டுமே'' என்று சொல்ல மாட்டோம். அது நாங்கள் *சித்தம்கொள்ளும்போது* செய்வதாகும். எனவே நாங்கள் விரும்பிய போதெல்லாம் செய்வது ''ஆவியானவரின் சித்தப்படி மட்டுமே'' வரும் அந்நிய பாஷையில் பேசும் வரமாக *இருக்க முடியாது*. மேலும் என்னைப்போலவே பவுலும் தான் தனிமையில் இருக்கும்போது அந்நிய பாஷையில் பேசியிருக்கிறார், அதற்கு அர்த்தம் தெரியாமலிருக்கிறது. எனவே இதுவும் அவர் 1 கொரிந்தியரில் குறிப்பிட்டிருக்கும் அந்நிய பாஷை வரமாக *இருக்க முடியாது*. ஏனென்றால் எப்போதுமே அதைத் தொடர்ந்து பாஷைக்கு வியாக்கியானம் செய்யும் வரம் வரும் என்று அவர் சொல்லியிருக்கிறார்.

அபூர்வமாகவே நான் பொதுவான கூட்டங்களில் அந்நிய பாஷையில் பேசியிருக்கிறேன். அப்படிச் செய்யும்படி பரிசுத்த ஆவியானவர் என்னை அசைப்பதை உணரும்போதுதான் அப்படிச் செய்திருக்கிறேன். ஆனால் கொரிந்தியர்களைப் போலவே என்னாலும் சபையில் அந்நிய பாஷையில் உரத்த குரலில் ஜெபிக்க முடியும், ஆனால் அதற்கு வியாக்கியானம் கொடுக்கப்பட மாட்டாது. இந்த வரத்தைக் கொண்டு பரிசுத்த ஆவியானவர் என்னை அசைத்திருக்கும் வேளையில் எல்லாம் சபையாரின் பக்திவிருத்திக்காக வியாக்கியானமும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

முடிவாக நாம் வேதாகமத்துக்கு இசைவான வகையில் அர்த்தம் காண வேண்டும். 1 கொரிந்தியர் 12:30 வசனத்தின் அடிப்படையில் எல்லா விசுவாசிகளும் அந்நிய பாஷையில் பேசக் கூடாது என்று சொல்லுபவர்கள் தங்கள் அர்த்தத்துக்கு இசைவாக இராத பல வேத வசனங்களைப் புறக்கணிக்கிறார்கள். இந்தப் பிழையின் காரணமாக தேவனிடமிருந்து வரும் ஒரு பெரிய ஆசீர்வாதத்தை இழந்து போகிறார்கள்.



# 12

# ஊழியத்தில் பெண்கள்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சபையில் கிட்டத்தட்ட பாதிப் பேர் பெண்களாக இருக்கிறார்கள் என்பது பொதுவான அறிவாக இருக்கிறபடியால், சரீரத்துக்குள்ளாக தேவனால் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பங்கை நாம் புரிந்துகொள்ள வேண்டியது அவசிய மாகும். பெரும்பாலான சபைகளிலும் ஊழியங்களிலும் பெண்கள் மதிப்புள்ள ஊழியர்களாக மதிக்கப்படுகிறார்கள். ஒட்டுமொத்த ஊழியத்தின் பெரும்பகுதியை அவர்கள் செய்கிறார்கள்.

ஆனால் எல்லோரும் பெண்களின் பங்கை ஒப்புக்கொள்ளு வதில்லை. சபைக்குள்ளாக பிரசங்கித்தல், தலைமைத்துவம் போன்ற சில ஊழிய அம்சங்களில் அவர்கள் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். சில சபைகள் மட்டுமே பெண் போதகர்களை அனுமதிக்கின்றன, பல சபைகள் அனுமதிப்பதில்லை. சிலர் பெண்கள் போதிக்க அனுமதிக் கிறார்கள், மற்றச் சபைகள் அனுமதிப்பதில்லை. சிலர் ஆராதனைகளில் பெண்கள் பேசுவதை முழுவதுமாகக் கட்டுப்படுத்தியிருக்கிறார்கள்.

பெண்களின் பங்கைக் குறித்துப் பவுல் 1 கொரிந்தியர் 14:34–35 மற்றும் 1 தீமோத்தேயு 2:11–3:7 வசனங்களில் சொல்லியிருப்பதற்கு வெவ்வேறு வகையில் அர்த்தம் காண்பதே இந்தக் கருத்து வேறுபாடு களுக்குக் காரணமாகும். இந்த அத்தியாயத்தின் இறுதியில் இந்தப் பகுதிகளைக்குறித்துப் பார்ப்போம்.

### துவக்கத்திலிருந்து...

வேதாகமத்தின் முதல் பக்கங்களிலிருந்து பெண்களைக் குறித்து என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதை நாம் முதலில் பார்ப்போம். ஆண்களைப்போலவே பெண்களும் தேவனுடைய சாயலில் சிருஷ்டிக் கப்பட்டிருக்கிறார்கள்: